செ.வெ.எண். 795 நாள். 4.11.09

## கம்பிவடத் தொலைக்காட்சித் தொழிலாளர்கள் நலவாரியம்

## செய்தி வெளியீடு

நம் நாட்டிலேயே அதிகமான தொலைக்காட்சி சேவை அளிக்கும் மாநிலம் தமிழ்நாடு ஆகும். எனவே இம்மாநிலத்தில் இத்தொழிலில் ஈடுபட்டிருக்கும் தொழிலாளர்களின் எண்ணிக்கை பிற மாநிலங்களுடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவு அதிகமாகும். இத்தொழிலாளர்களின் நலன் கருதி அரசு இவர்களுக்கென்று தனியாக ஒரு நலவாரியம் அமைத்துள்ளது.

இவ்வாரியத்தின் முக்கிய கூட்டம் மாண்புமிகு தமிழக முதல்வர் ஆணையை ஏற்று, மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் தலைமையில் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்டு 4–11–2009 இன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலாளர்கள் நலவாரியத்தின் மூலம் கம்பிவடத் தொலைக்காட்சி தொழிலாளர்களுக்கு அரசு செயல்படுத்தவிருக்கும் நலத்திட்ட உதவிகள் மற்றும் அதற்கான வழிகாட்டி நெறிமுறைகள் விவாதிக்கப்பட்டன. இந்நெறிமுறைகளைப் பின்பற்றி உறுப்பினர் சேர்க்கைக்கான படிவமும் பிற படிவங்களும் அச்சிடப்பட்டு விநியோகிக்கப்படவுள்ளன. உறுப்பினராகச் சேர்க்கப்படும் நபர்களுக்கு உரிய அடையாள அட்டை வழங்கப்படும்.

இதன்பின்னர் உறுப்பினர்கள் கோரும் நலத்திட்ட உதவிகள் வழங்குவதற்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு தகவல் தொழில்நுட்பவியல் துறை அமைச்சர் அவர்கள் அனைத்துப் பணிகளையும் விரைவில் முடித்து பயனாளிகளுக்கு பயன்கள் வழங்கப்படவேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுரை வழங்கினார். இத்திட்டத்தின் மூலம் சுமார் முப்பதாயிரம் நபர்கள் பயன்பெறுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நலத் திட்டங்களுக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களால் ரூ.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

அவற்றுள் இத்தொழிலாளர்கள் அனைவரும் கலைஞர் மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் உதவிபெற தகுதியுள்ளவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9

PR.No: 795 Date. 4.11.09

**Cable TV Workers Welfare Board**

**Press Release**

Tamil Nadu, is a state with great potential, in which the cable industry provides employment opportunities to a substantial work force. To promote the welfare of these workers the Government constituted a separate Welfare Board namely the "Cable TV Workers Welfare Board".

As per the orders of the Hon'ble Chief Minister a meeting of this Board was presided by the Hon'ble Minister for Information Technology on the 4th of November, 2009 at Secretariat with Official and Non-Official members.

The various welfare measures to be implemented and the guidelines to be adopted in implementing the welfare measures through the Welfare Board were discussed in detail. Based on the guidelines formulated, the forms for the enrolment of membership and other forms for availing the welfare measures are to be printed and distributed to the prospective members. All enrolled members will be provided with a Photo Identity Card. Subsequent to this action will be taken to provide the welfare assistance requested by the members.

The Hon'ble Minister for Information Technology advised the Officials to expedite the works relating to provision of assistance so as to disburse the same to the beneficiaries at the

earliest. It is expected that about 30000 members would be benefited under this scheme. The Hon'ble Chief Minister has allocated Rs 50 Lakh to the Welfare Board for the implementation of the welfare measures.

The important aspect is that the Cable TV Workers who will be enrolled are also eligible to avail assistance under Dr Kalaignar Health Insurance Scheme.

2/2

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9